**செ. கு. எண்**: 158 **நாள்**: 27.04.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.4.2012

சென்னை பெருநகர காவல், மணலி போக்குவரத்து காவல் பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. க.சந்தனமாரியப்பன் அவர்கள் 26.4.2012 அன்று மணலி விரைவு சாலையில் போக்குவரத்தினை ஒழுங்குப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை இரண்டாம் நிலைக் காவலர் திரு. சந்தனமாரியப்பன் அவர்கள் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. சந்தனமாரியப்பன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியிலிருக்கும் போது காலமான இரண்டாம் நிலைக் காவலர் திரு. சந்தனமாரியப்பன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**